தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 150 | 4 Pages | 28.12.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 150 | 4 பக்கங்கள் | 28.12.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்**
**கொல்லாமை சூழ்வான் தலை**

**விளக்கம்:** வாழ்க்கையின் தன்மையைக்கண்டு அஞ்சித் துறந்தவர்கள் எல்லாரிலும், கொலைசெய்வதற்கு அஞ்சிக் கொல்லாத அறத்தைப் போற்றுகின்றவன் உயர்ந்தவன்.

## உத்தர பிரதேசம்: பாலியல் பலாத்கார முயற்சியில் 8 வயது சிறுமி கொலை; மூட்டையில் உடல் கண்டெடுப்பு

லக்னோ, டிச.28

உத்தர பிரதேச மாநிலம் வாரணாசியில், ஒரு பள்ளி அருகே 8 வயது சிறுமியின் உடல் சாக்கு மூட்டையில் கண்டெடுக்கப்பட்டது. இது குறித்து அப்பகுதி மக்கள் போலீசாருக்கு தகவல் தெரிவித்த நிலையில், போலீசார் விரைந்து சென்று சிறுமியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

இது குறித்து போலீசார் நடத்திய விசாரணையில், உயிரிழந்த சிறுமி கொசுவர்த்தி வாங்குவதற்காக தனது வீட்டின் அருகே உள்ள கடைத்தெருவுக்கு சென்றது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து அந்த பகுதியில்உள்ளசி.சி.டி.வி. கேமராக்களைபோலீசார்ஆய்வுசெய்தபோது, சிறுமியை பின்தொடர்ந்து ஒரு நபர் செல்வதும், சிறிது நேரம் கழித்து அந்த நபர் ஒரு சாக்கு மூட்டையை தூக்கிச் செல்வதும் பதிவாகி உள்ளது.

இதையடுத்து, சிறுமியை பின்தொடர்ந்து சென்ற இர்ஷாத் என்ற நபரை போலீசார் அடையாளம் கண்டு அவரை கைது செய்தனர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், சிறுமியை இர்ஷாத் பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதும், பின்னர் சிறுமி கூச்சலிட்டதால் அவரை கொலை செய்து உடலை சாக்கு மூட்டையில் கட்டி பள்ளி அருகே கொண்டு சென்று வீசியதும் தெரியவந்துள்ளது. தொடர்ந்து கைதான நபரிடம் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## உ.பி.: நிலத் தகராறில் விவசாயி அடித்துக் கொலை

லக்னோ, டிச.28

உத்தரபிரதேச மாநிலம் அயோத்தி மாவட்டத்தில் உள்ள வந்தியா குர்த் கிராமத்தை சேர்ந்தவர் விவசாயி அஹில்கர் (வயது 45). நேற்று இரவு தனது மகனுக்கு உணவு வழங்க வயலுக்கு சென்றுள்ளார்.

அப்போது, கிராம வாசிகள் சிலர் அவரை வழிமறித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். வாக்குவாதம்கைகலப்பானதுடன்அவர்கள்அஹில்கரை கட்டைகளை கொண்டு தாக்கியுள்ளனர். இதில் அஹில்கர் படுகாயங்களுடன் பரித்பூர் சமூக சுகாதார மையத்திற்கு அழைத்து செல்லப்பட்டு அங்கு அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்டது. பின்னர் பரேலி நகரில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் அவரது உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இறந்தவரின் உறவினர்கள் அளித்த புகாரின் பேரில், 4 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் குறித்து, போலீசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் பழைய நிலத் தகராறில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரியவந்துள்ளது.

## திருப்பதி சொர்க்க வாசல் தரிசனம்: 91 கவுண்டர்களில் பக்தர்கள் டோக்கன் பெற ஏற்பாடு



திருமலை, டிச.28

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் வைகுண்ட ஏகாதசியையொட்டி ஜனவரி 10ந் தேதி சொர்க்கவாசல் திறக்கப்பட்டு 19ந் தேதி வரை 10 நாட்களுக்கு பக்தர்கள் அனுமதிக்கப்பட உள்ளனர். இந்த 10 நாட்களுக்கு உண்டான ரூ.300 சிறப்பு நுழைவு தரிசன டிக்கெட் ஆன்லைனில் நேற்று வெளியிடப்பட்டது. இந்த டிக்கெட்டுகள் வெளியிடப்பட்ட 25 நிமிடத்தில் 1.40 லட்சம் டிக்கெட்டுகளையும் பக்தர்கள் முன்பதிவு செய்தனர். இந்த டிக்கெட்டுகளை பெறுவதற்காக 14 லட்சம் பேர் தேவஸ்தான இணையதளத்தில் முயற்சி மேற்கொண்டு கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்தனர்.

சிறப்பு நுழைவு தரிசன டிக்கெட்டுகள் தீர்ந்த நிலையில், இனி இலவச தரிசன டோக்கன்களை பெற்று சொர்க்கவாசல் தரிசனம் செய்யலாம். சொர்க்கவாசல்திறக்கப்படும்10நாட்களுக்கானஇலவசதரிசனடோக்கன்கள்திருப்பதியில் 9 இடங்களில் வழங்கப்பட உள்ளன. இதற்கான கவுண்டர்கள் ஏற்பாடு செய்வதை தேவஸ்தான செயல் அதிகாரி ஷியாமளா ராவ், கூடுதல் செயல் அதிகாரி வெங்கையா சவுத்திரியுடன் இணைந்து ஆய்வு மேற்கொண்டார். பின்னர் செயல் அதிகாரி ஷியாமளா ராவ் செய்தியாளர்களிடம் கூறியதாவது: சொர்க்கவாசல் தரிசனத்திற்கு ஜனவரி 10, 11 மற்றும் 12 ஆகிய 3 நாட்களுக்கு உண்டான 1.20 லட்சம் இலவச சர்வதரிசன டோக்கன்கள் ஜனவரி 9ந்தேதி காலை 5 மணிமுதல் தொடர்ந்து வழங்கப்படும். 3 நாட்களுக்கான டோக்கன்கள் முடிந்த பின்னர், அந்தந்த நாட்களுக்கு டோக்கன்கள் முந்தைய நாள் வழங்கப்படும்.

இதற்காக திருப்பதியில் 8 மையங்களில் 87 கவுண்டர்கள், திருமலையில் 4 கவுண்டர்கள் என மொத்தம் 91 கவுண்டர்கள் அமைக்கப்பட்டுள்ளன. பக்தர்கள் தங்களின் ஆதார் அட்டையை காண்பித்து டோக்கன் பெற வேண்டும். இந்தமுறை முறைகேடுகள் நடக்காமல் இருக்க டோக்கன் பெற்ற பக்தர்களுக்கு அவர்களின் புகைப்பட அடையாளத்துடன் கூடிய டோக்கன் வழங்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## மத்திய பிரதேசத்தில் மின் கோபுரம் சரிந்து விபத்து: 3 தொழிலாளர்கள் பலி

போபால், டிச.28

மத்திய பிரதேசத்தின் சித்தி மாவட்டத்தில் 400 கிலோவோல்ட் உயர்மின் கோபுரம் சரிந்து விழுந்ததில் 3 தொழிலாளர்கள் உயிரிழந்தனர் மற்றும் 6 பேர் காயமடைந்தனர் என்று போலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மாவட்டத்தின் ஆம்தாத் கிராமத்தில் மதியம் 12.30 மணியளவில் இந்த சம்பவம் நடந்ததாக அந்த அதிகாரி தெரிவித்தார். மேலும் இந்த சம்பவம் குறித்து சித்தி காவல் கண்காணிப்பாளர் ரவீந்திர வர்மா கூறுகையில், "தொழிலாளர்கள் பழைய உயர்மின் கோபுரங்களை புதியதாக மாற்றி அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஒரு உயர்மின் கோபுரம் திடீரென தொழிலாளர்கள் குழுவின் மீது சரிந்து விழுந்தது. இதில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் மற்றும் ஒருவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார். மேலும் இந்த சம்பவத்தில் காயமடைந்த 6 பேரும் அருகில் உள்ள சஞ்சய் காந்தி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்கள் மேற்கு வங்காள மாநிலத்தை சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்" என்றார்.

# மன்மோகன் சிங் உடலுக்கு அஞ்சலி செலுத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் டெல்லி பயணம்




சென்னை, டிச.28

முன்னாள் பிரதமரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான மன்மோகன் சிங் (வயது 92) நேற்று இரவு உயிரிழந்தார். உடல்நலக்குறைவால் டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மன்மோகன் சிங் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதையடுத்து, மன்மோகன் சிங் உடல் டெல்லியில் உள்ள அவரது வீட்டிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அவரது உடலுக்கு அரசியல் கட்சி தலைவர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். பொதுமக்களும் மன்மோகன் சிங் உடலுக்கு அஞ்சலி செலுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் பின்னர், மன்மோகன் சிங்கின் உடல் அரசு மரியாதையுடன் நாளை தகனம் செய்யப்பட உள்ளது.

இந்நிலையில், மறைந்த முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் உடலுக்கு அஞ்சலி செலுத்த முதல் மந்திரி மு.க.ஸ்டாலின் இன்று காலை டெல்லி புறப்பட்டு சென்றார். சென்னை விமான நிலையம் சென்ற முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அங்கிருந்து விமானம் மூலம் டெல்லி புறப்பட்டு சென்றார்.

# பெண் ஏட்டுக்கு ரூ.30 ஆயிரம் அபராதம் விதித்த மனித உரிமை ஆணையத்தின் உத்தரவு ரத்து: ஐகோர்ட்டு தீர்ப்பு



சென்னை, டிச.28

திருச்சி பேருந்து நிலையத்தில் கடந்த 2012ம் ஆண்டு பிரபு என்பவர் அமர்ந்து கொண்டு அங்கு வந்து செல்லும் பெண்ணை பாட்டு பாடி கேலி செய்ததாக திருச்சி மகளிர் போலீசார் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர். பின்னர் ஸ்டேஷன் ஜாமீனில் அவரை விடுவித்தனர்.

மறுநாள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பிரபு, பேருந்து நிலையத்தில் உட்கார்ந்திருந்த போது, பெண் போலீசார் விசாரித்தனர். உட்கார்ந்துகொண்டே பதில் அளித்ததால், என்னை அடித்து உதைத்தனர். அவர்களுடன் மேலும் 4 ஆண் போலீசாரும் சேர்ந்து கொண்டு என்னை தாக்கினர் என்று மாநில மனித உரிமை ஆணையத்தில் புகார் செய்தார்.

இந்த புகாரை விசாரித்த மனித உரிமை ஆணையம், திருச்சி பெண் ஏட்டு ஹேமலதா மனித உரிமையை மீறியதாக கூறி ரூ.30 ஆயிரத்தை இழப்பீடாக பிரபுக்கு வழங்க உத்தரவிட்டது.

இந்தஉத்தரவைஎதிர்த்துசென்னை ஐகோர்ட்டில் ஏட்டு ஹேமலதா வழக்குதொடர்ந்தார். இந்தவழக்கை விசாரித்த நீதிபதிகள் எம்.சுந்தர், கே.ராஜசேகர் ஆகியோர், மனித உரிமை ஆணையத்தின் உத்தரவை ரத்து செய்தனர்.

அந்த உத்தரவில், "பிரபு உடலில் போலீசார் தாக்கியதால் காயம் எதுவும் ஏற்பட்டதாக இல்லை. அதனால், அவருக்கு ரூ.30 ஆயிரம் அபராதம் விதித்த மனித உரிமை ஆணையத்தின் உத்தரவை ரத்து செய்கிறோம்" என்று கூறியுள்ளனர்.

# கோவையில் மாநகராட்சி அதிகாரிகளுடன் வானதி சீனிவாசன் எம்.எல்.ஏ. வாக்குவாதம்




கோவை, டிச.28

கோவை சிவானந்தா காலனி பகுதியில் பயனாளர்களுக்கு இலவச தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பா.ஜ.க. எம்.எல்.ஏ. வானதி சீனிவாசன் கலந்து கொண்டார். அப்போது மாநகராட்சி அதிகாரிகளுக்கும், வானதி சீனிவாசனுக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து மக்களுக்கு செய்யக்கூடிய பணிகளை கவுன்சிலர்கள் தடுத்து நிறுத்துவதாக மாநகராட்சி அதிகாரியிடம் வானதி ஸ்ரீனிவாசன் குற்றம்சாட்டினார். ஆனால் இந்த குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பு தெரிவித்த மாநகராட்சி உதவி பொறியாளர் நடராஜன், அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# புலன் விசாரணையை வெளியில் சொல்லக்கூடாது... இருந்தாலும் சொல்கிறேன் காவல் ஆணையர் அருண்



சென்னை, டிச.28

அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சென்னை மாநகர காவல் ஆணையர் அருண் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது பேசிய அவர், "எப்.ஐ.ஆர். இப்படி பதிவு செய்திருக்க வேண்டும், அப்படி பதிவு செய்திருக்க வேண்டும் என்று கூறுகின்றனர். பாதிக்கப்பட்டவர்கள் என்ன கூறுகின்றனரோ அதை அப்படியே பதிவு செய்வதுதான் எப்.ஐஆர். இந்த வழக்கில் அப்படித்தான் எப்.ஐ.ஆர். பதிவு செய்து விசாரிக்க ஆரம்பித்தோம்.

கோட்டூர்புரம் உதவி ஆணையர் தலைமையில் 4 தனிப்படைகள் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு தனிப்படைக்கும்ஒருபணியைக்கொடுத்து விசாரித்தோம். சந்தேகப்படும் நபர்கள் சிலரை கொண்டுவந்து விசாரித்தோம். விசாரணைக்குப் பின்அறிவியல்பூர்வமாக ஆதாரங்களை சேகரித்து, செல்போன் டவர் லொகேஷன், சிடிஆர் எல்லாம் பதிவிட்டு டிசம்பர் 25ம் தேதி காலையிலேயே காவல் துறை குற்றம்சாட்டப்படும் நபரை பிடித்துவிடுகிறோம். குற்றத்தை அந்த நபர் தான் செய்தார் என்பதை உறுதிப்படுத்துவதற்காக, மேலும் விசாரணை செய்து அவர்தான் குற்றவாளி என்பதை உறுதிப்படுத்திய உடன் கைது செய்து ரிமாண்ட் செய்தோம். இது தான், இந்த வழக்கைப் பொறுத்தவரையில் நடந்தது.

போக்சோ மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு எப்ஐஆர் பதிவு செய்யும்போது, சி.சி.டி.என். எஸ். எனும் ஆன்லைன் போர்ட்டல் ஆட்டோமெட்டிக்காக லாக் ஆகிவிடும். சில தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஆட்டோமெட்டிக்காக லாக் ஆவது தாமதமாகியிருக்கிறது. அந்த தாமதமான நிலையில், சிலர் பார்த்து அதை பதிவிறக்கம் செய்துள்ளனர். அவர்கள் மூலம் எப்.ஐ.ஆர். வெளிவந்திருக்கலாம்.

இரண்டாவது, எந்த எப்.ஐ.ஆரை பதிவு செய்தாலும், புகார்தாரருக்கு ஒரு காப்பி கொடுக்க வேண்டும். அதன் அடிப்படையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு பிரதி கொடுத்தோம். இந்த இரண்டு வழிகளில் தான் எப்.ஐ.ஆர். வெளியே வந்திருக்க வேண்டும். இதுபோன்ற வழக்குகளில் எப்.ஐ.ஆர். வெளியே வந்திருக்கக்கூடாது. அவ்வாறு வெளியிடுவது சட்டப்படி குற்றம். அதேபோல், அதை எடுத்துவைத்து விவாதிப்பதும் சட்டப்படி குற்றம்.

பாதிக்கப்பட்டவரின் அடையாளம் எந்த வகையிலும் வெளியே தெரியக் கூடாது. நாம் கொடுக்கும் தகவல்களை வைத்தே பாதிக்கப்பட்ட நபரை கண்டுபிடிக்க முடியும் என்ற அளவுக்கு தகவல் தெரிவித்தாலே அதுவும் தவறு. எனவே, இந்த எப்.ஐ.ஆர். வெளியானது தொடர்பாக கோட்டூர்புரம் காவல் நிலையத்தில் வழக்குப் பதியப்பட்டுள்ளது. மேலும், யார் இதை கசியவிட்டார்கள் என்பதை கண்டறிந்து அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

புலன் விசாரணையை வெளியில் சொல்லக்கூடாது இருந்தாலும், இதை நிறைய பேர் அரசியல் பண்ணுவதால் சொல்கிறேன். இந்த சம்பவம் தொடர்பாக இதுவரை நடந்த புலன் விசாரணையில், ஞானசேகரன் ஒருவர்தான் குற்றவாளி.

மாணவி பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் கைது செய்யப்பட்ட ஞானசேகரன் வேறுஒருவரிடம் பேசியதாகக் கூறுவது தவறு. குற்றம் நடக்கும்போது ஞானசேகரனின் மொபைல் Airplane modeல் இருந்துள்ளது; குற்றவாளி யாரிடமும் போனில் 'சார்' எனப் பேசவில்லை. மிரட்டுவதற்காக அப்படிச் சொல்லியுள்ளார்.


ஞானசேகரன் மீது சென்னையில் 2013ல் இருந்து 20 வழக்குகள் உள்ளன. இந்த அனைத்து வழக்குகளும் திருட்டு போன்ற வழக்குகள்தான். அவர்மீது ரவுடியிசம், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகள் இல்லை. அந்த 20 வழக்குகளில் 6ல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. மற்ற வழக்குகள் விசாரணையில் இருந்து வருகிறது. இதுவரை கைது செய்யப்பட்டுள்ள ஞானசேகரனால் பாதிக்கப்பட்டதாக வேறு எந்த பெண்களிடத்தில் இருந்தும் காவல் துறைக்கு புகார் வரவில்லை. ஞானசேகரனை கஸ்டடியில் எடுத்து விசாரித்து, போன் உள்ளிட்ட தகவல்களை சேகரித்து யாராவது பாதிக்கப்பட்டிருந்தால், அவர்களிடம் புகார்கள் பெறப்படும்.

அண்ணாபல்கலைக்கழகத்தில் 70 சிசிடிவி கேமராக்கள் உள்ளன. இதில் 56 சிசிடிவி வேலை செய்கிறது. அதிலிருந்து ஆதாரங்கள் கிடைத்தன. இந்த வழக்கைப் பொறுத்தவரை மாலை 4 மணிக்கு புகார் அளித்தனர். அதிலிருந்து அடுத்த நாளுக்குள் எப்.ஐ.ஆர். பதிவு செய்து, குற்றவாளியை கைது செய்து ரிமாண்ட் செய்திருக்கிறோம்" என்று அவர் கூறினார்.

இதனைத்தொடர்ந்து அ.தி.மு.க.வினர் கைது செய்யப்பட்டது ஏன்? என கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், "போராட்டம் நடத்துவதற்கு என சில இடங்கள் உள்ளது, அதை மீறி போராட்டம் நடத்துபவர்கள் கைது செய்யப்படுவார்கள். அதன் அடிப்படையில் அ.தி.மு.க.வினர்கைது செய்யப்பட்டனர்" என்று காவல் ஆணையர் அருண் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், "மாணவியின் நம்பிக்கையை உறுதி செய்யும் வகையில் காவல்துறை நடவடிக்கை எடுத்துள்ளது. யார் பாதிக்கப்பட்டாலும் தைரியமாக புகார் அளிக்க முன்வர வேண்டும்" என்று சென்னை காவல் ஆணையர் அருண் தெரிவித்தார்.

# மாணவி வன்கொடுமை: வழக்கை தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்தது தேசிய மகளிர் ஆணையம்

சென்னை, டிச.28

சென்னை கிண்டியில் அண்ணா பல்கலைக்கழகத்தில் தற்போது பயின்று வரும் மாணவி ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவம் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

மாணவி கொடுத்த புகாரின்பேரில், கோட்டூர்புரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 4 சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குபதிவு செய்து குற்றவாளியை 3 தனிப்படைகள் அமைத்து வலைவீசி தேடி வந்தனர். இந்த நிலையில் இந்த கொடுஞ்செயலில் ஈடுபட்ட ஞானசேகரன் (37) என்பவரை தனிப்படை போலீசார் அதிரடியாக கைது செய்தனர்.

ஞானசேகரன் கைதை தொடர்ந்து இந்த பாலியல் குற்ற செயலில் ஈடுப்பட்ட மற்றொரு நபரை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர். இதனிடையே மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட விவகாரத்தில் எப்.ஐ.ஆரில் மாணவி கூறிய புகார்கள் குறித்த தகவல்கள் வெளியாகி பரபரப்பு எற்படுத்தி இருந்தது. இதில் மாணவியின் பெயர், அவரது முகவரி உள்ளிட்ட அனைத்து விவரங்களும் இடம்பெற்றிருந்தது. பாதிக்கப்பட்ட பெண்ணின் தகவல்கள் மறைக்கப்படாமல் சமூக வலைதளங்களில் அப்படியே வெளியிடப்பட்டதற்கு சமூக ஆர்வலர்கள் மற்றும் எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன.

இதனைத்தொடர்ந்து பாதிகப்பட்ட மாணவியின் விவரங்களை யாரும் பார்க்கவும் பதிவிறக்கவும் செய்ய முடியாதபடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்படி மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட விவகாரம் குறித்த புகைப்படமோ, எப்.ஐஆர். நகலையோ இணையதளத்தில் பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சென்னை காவல் ஆணையர் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில் அண்ணா பல்கலை. மாணவி வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக தேசிய மகளிர் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துள்ளது.

இதுதொடர்பாக,தேசிய மகளிர் ஆணையம் எக்ஸ் வலைத்தள பக்கத்தில், "சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 19 வயது மாணவி பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதை தேசிய மகளிர் ஆணையம் (NCW) தானாக முன்வந்து விசாரணை நடத்தியது. இந்த கொடூரமான செயலை ஆணையம் கடுமையாக கண்டிக்கிறது மற்றும் பாதிக்கப்பட்ட பெண்ணின் நீதிக்கான போராட்டத்தில் உடன் நிற்கும்.

பாதிக்கப்பட்டவருக்கு இலவச மருத்துவம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யவும். இந்த சம்பவத்தில் ஈடுபட்டவர்களை BNS, 2023 இன் பிரிவு 71ஐ எப்.ஐ.ஆரில் சேர்க்கவும். அத்துடன், பாதிக்கப்பட்டவரின் அடையாளத்தை பகிரங்கமாக வெளிப்படுத்தியதற்காக அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்ஒருபழைய குற்றவாளி என்பது தெரியவந்துள்ளது. எனவே, அவர் மீது வழக்கு இருந்தும் தமிழ்நாடு காவல்துறை முந்தைய வழக்குகளில் நடவடிக்கை எடுக்க தவறிவிட்டது. இந்த அலட்சியம் அவரை இது போன்ற குற்றங்களை செய்யத் தூண்டியது, இது தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து வருவதைப் பற்றிய தீவிர கவலையை எழுப்புகிறது" என்றும் அதில் தேசிய மகளிர் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் ஸ்ரீமதி. விஜய ரகத்கர் தமிழக காவல்துறைக்கு இந்த அதிரடியான உத்தரவை பிறப்பித்துள்ளது குறிப்பிடதக்கது.

# கோவை: தாயை இழந்து தவிக்கும் குட்டி யானை



கோவை, டிச.28

கோவை மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியை ஒட்டியுள்ள தடாகம் மற்றும் வரப்பாளையம் பகுதியில் நேற்று முன்தினம் காலை கூட்டத்தில் இருந்து பிறந்து 1 மாதமே ஆன குட்டி ஒன்று தனியாக சுற்றி கொண்டிருப்பதாக வனத்துறையினருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து வனத்துறையினர் விரைந்து சென்று குட்டி யானையை மீட்டனர்.

பின்னர் குட்டியை யானை கூட்டத்துடன் சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அப்போது குட்டி யானையின் தாய் பன்னிமடை காப்புக்காடு பகுதியில் அமர்ந்த நிலையில் உயிரிழந்து கிடப்பது தெரியவந்தது. இதுபற்றி தகவலறிந்த வனத்துறையினர், யானை உயிரிழந்தது குறித்து நேரில் விசாரணை மேற்கொண்டனர். மேலும்உயிரிழந்தயானையின் முக்கிய பாகங்கள் எடுத்து ஆய்வகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. யானை இறந்தது குறித்து வனத்துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இதுகுறித்து வனத்துறை அதிகாரி ஒருவர் கூறும்போது,

இறந்த யானைக்கு 30 வயது இருக்கும். உள் உறுப்புகளில் பிரச்சினை ஏற்பட்டு, அமர்ந்த நிலையில் உயிரிழந்துள்ளது. ஒருமாதகுட்டியானையை, அதன் கூட்டத்துடன் சேர்க்க முயற்சி செய்து வருகிறோம். பொன்னூத்தம்மன் கோவில் அருகில் உள்ள வனப்பகுதியில் 10 யானைகள் கொண்ட கூட்டத்துடன் குட்டியை சேர்க்கும் முயற்சியில் வனத்துறையினர் ஈடுபட்டனர். ஆனால் அந்த கூட்டத்தில் இருந்த பெண் யானைகள் இந்த குட்டியை சேர்த்துக்கொள்ளவில்லை.

இதனைத்தொடர்ந்து 2வது நாளான நேற்றும் குட்டி யானையை கூட்டத்துடன் சேர்க்கும் முயற்சிகள் நடைபெற்றது. ஆனால் யானையை கூட்டத்துடன் சேர்க்க முடியவில்லை. இதுபோன்று 4 முறை முயற்சிகள் நடைபெறும். அதன்பின்னரும் யானை கூட்டத்துடன் சேர்க்க முடியவில்லை என்றால், உயர் அதிகாரிகளின் உத்தரவை பெற்று குட்டி யானையை காப்பகத்திற்கு கொண்டு சென்று பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

# ஓடும் டிராக்டரில் இருந்து கீழே விழுந்து சிறுவன் உயிரிழப்பு

செங்கல்பட்டு, டிச.29

செங்கல்பட்டு மாவட்டம் காயார் போலீஸ் நிலைய எல்லைக்குட்பட்ட அஸ்தினாபுரம் பகுதியில் சந்திரன் என்பவருக்கு சொந்தமான நிலம் உள்ளது. இங்கு மேல்கல்வாய் கிராமத்தை சேர்ந்த அபிராமி என்பவர் கூலி வேலை செய்து வருகிறார். நேற்று பகல் 12 மணி அளவில் சந்திரன் நிலத்தில் அவருடைய மகன் தர்மலிங்கம் (வயது 44) டிராக்டர் மூலம் வயலை உழுது கொண்டிருந்தார். அப்போது அங்கு விளையாடி கொண்டிருந்த அபிராமியின் 5 வயது மகன் மூர்த்தியை தர்மலிங்கம் தனது மடியில் வைத்துக் கொண்டு டிராக்டரை ஓட்டியதாக கூறப்படுகிறது. அப்போது திடீரென நிலைத்தடுமாறி சிறுவன் மூர்த்தி தர்மலிங்கம் மடியில் இருந்து கீழே விழுந்தான். டிராக்டரில் சிக்கி மூர்த்தி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தான். இது குறித்து தகவல் அறிந்த காயார் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மூர்த்தியின்உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக செங்கல்பட்டு அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து காயார் போலீசார் வழக்குப்பதிவு செய்து தர்மலிங்கத்திடம் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

# அரசு அதிகாரியிடம் ரூ.63.8 லட்சம் மோசடி; குஜராத் சென்று 2 பேரை அதிரடியாக கைது செய்த தமிழக காவல்துறை




பெரம்பலூர், டிச.28

பெரம்பலூர் அருகே அய்யலூரை சேர்ந்த செல்வகுமாரி என்பவர், தோட்டக்கலை இயக்குநர் அலுவலகத்தில் உதவி இயக்குனராக பணிபுரிந்து வருகிறார்.

இவர் காவல்துறையினரிடம் அளித்த புகாரில், டிரேடிங் மூலம் அதிக லாபம் ஈட்டித் தருவதாக இன்ஸ்டாகிராம் செயலியில் வந்த தகவலை நம்பி, 63 லட்சத்து 87 ஆயிரம் ரூபாய் முதலீடு செய்து ஏமாந்ததாக கூறியுள்ளார்.

இதுகுறித்து விசாரணை நடத்திய சைபர் கிரைம் பிரிவு போலீசார், குஜராத் மாநிலம் வடோதரா மாவட்டத்திற்கு நேரில் சென்று, ஷர்மா சுனில் குமார், ஷர்மா பன்சிலால் ஆகிய 2 நபர்களை அதிரடியாக கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 50 ஆயிரம் ரூபாய் பணம், 4 செல்போன்கள், 5 சிம் கார்டுகள், 7 ஏ.டி.எம் கார்டுகளை கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட 2 பேரையும் குஜராத்தில் உள்ள வதோதரா கோர்ட்டில் தமிழக காவல்துறையினர் ஆஜர்படுத்தினர். பின்னர்அவர்களை பெரம்பலூர் அழைத்து வந்து வேப்பந்தட்டை கோர்ட்டில் ஆஜர்படுத்தி, 2 பேரையும் திருச்சி சிறையில் அடைத்தனர்.

# வெள்ளத்திற்கு பிறகு சீரான நீர்வரத்து; குற்றால அருவிகளில் குவியும் சுற்றுலா பயணிகள்




தென்காசி, டிச.28

தென்காசி மாவட்டத்தில் கடந்த டிசம்பர் 12ம் தேதிபெய்த தொடர்மழையின்காரணமாககுற்றாலம் மெயின்அருவி,ஐந்தருவி, பழைய குற்றாலம், சிற்றருவி, புலியருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதில் அருவிக்கரைகள் சேதமடைந்தன. மேலும் வெள்ளம் காரணமாக சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது.

அதனை தொடர்ந்து ஐந்தருவி, புலியருவியில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டது. தற்போது நீர்வரத்து முற்றிலும் சீரான நிலையில், குற்றாலஅருவியில்அனைத்து பகுதிகளிலும் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏராளமான சுற்றுலா பயணிகள் தங்கள் குடும்பத்தினருடன் குற்றாலத்தில் குவிந்து வருகின்றனர்.

அதோடு, குற்றாலத்திற்கு வரும் அய்யப்ப பக்தர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்படுகிறது. அதே சமயம், காட்டாற்று வெள்ளப்பெருக்கினை தொடர்ந்து ஏற்பட்ட சேதங்களை சரிசெய்யும் பணிகள்நடைபெற்று வருவதால், பழைய குற்றால அருவியில் மட்டும் 14வது நாளாக குளிப்பதற்கு தடை தொடர்கிறது.

# திருச்சியில் ரூ.15 லட்சம் மதிப்பிலான கடத்தல் தங்கம் பறிமுதல்




திருச்சி, டிச. 28

திருச்சி விமான நிலையத்தில் வெளிநாடுகளில் இருந்து வரும் விமானங்களில் தங்கம் கடத்தி வரப்படுவதாக சுங்கத்துறை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து விமான நிலையத்தில் சுங்கத்துறை அதிகாரிகள் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, கோலாலம்பூரில் இருந்து திருச்சி வந்த விமான பயணிகளிடம் நடத்தப்பட்ட சோதனையில் ஒரு பயணியின் பையில் இருந்த சிலிண்டர் ரெகுலேட்டரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 194 கிராம் கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. இந்த கடத்தல் தங்கத்தின் சர்வதேச மதிப்பு ரூ.15 லட்சம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் இந்த சம்பவத்தில் ஈடுபட்ட நபரை சுங்கத்துறை அதிகாரிகள் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கோத்தகிரிஊட்டி சாலையில் சிறுத்தை நடமாட்டம்: வாகன ஓட்டிகள் அச்சம்



கோத்தகிரி, டிச.28

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் இருந்து ஊட்டிக்கு செல்லும் சாலை பிரதான மாநில நெடுஞ்சாலை ஆகும். இந்த சாலையை உள்ளூர் வாகன ஓட்டிகள் மட்டுமின்றி சுற்றுலா பயணிகளும் அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் மதியம் 2 மணியளவில் இந்த சாலையை பேரார் கிராமத்திற்கு அருகே சிறுத்தை ஒன்று கடந்து சென்றது. இதனால் அந்த வழியாக சென்ற வாகன ஓட்டிகள் அச்சம் அடைந்தனர்.

இந்த காட்சியை காரில் சென்ற சிலர் வீடியோ எடுத்து, சமூக வலைத்தளங்களில் பதிவிட்டனர். இந்த வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. கோத்தகிரி ஊட்டி இடையே சாலையை சிறுத்தை கடந்து செல்வதால், வாகனஓட்டிகள்அச்சத்துடனே அவ்வழியாக பயணித்து வருகின்றனர்.

# இரவுப்பணியில் இருந்த பெண் போலீசுக்கு பாலியல் தொல்லை

விருதுநகர், டிச.28

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே உள்ள தொம்பக்குளம் கிராமத்தை சேர்ந்தவர் மோகன்ராஜ் (வயது 54). போலீஸ்சிறப்புசப்இன்ஸ்பெக்டர். தற்போது ராஜபாளையத்தில், மலையடிப்பட்டி காவலர் குடியிருப்பில் வசித்து வருகிறார். மோகன்ராஜுவுக்கு மது குடிக்கும் பழக்கம் இருந்துள்ளது.

இந்த நிலையில், சம்பவத்தன்று இரவில் போலீஸ் நிலையத்தில் பணியில் இருந்த பெண் போலீசிடம் மதுபோதையில் தகாத முறையில் நடந்துகொண்டு பாலியல் தொல்லை கொடுத்ததாக மோகன்ராஜு மீது புகார் எழுந்தது. இதுகுறித்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு கண்ணனுக்கும் தகவல் வந்தது.

உடனடியாக அவர் விசாரணை நடத்த உத்தரவிட்டதுடன், மோகன்ராஜை ஆயுதப்படைக்கு மாற்றி நடவடிக்கை எடுத்தார். தீவிர விசாரணைக்கு பின்னர் மோகன்ராஜ் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவர் மீது மேல்நடவடிக்கையும், துறை ரீதியான நடவடிக்கையும் எடுக்கப்படும் என போலீசார் தரப்பில் கூறப்படுகிறது. இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தமிழக காவல்துறையில் 4 ஏ.டி.எஸ்.பி.க்கள் இடமாற்றம்: டி.ஜி.பி. சங்கர் ஜிவால் உத்தரவு



சென்னை, டிச.28

தமிழக காவல்துறையில் 4 ஏ.டி.எஸ்.பிக்களை இடமாற்றம் செய்து தமிழகடி.ஜி.பி. சங்கர்ஜிவால் உத்தரவுபிறப்பித்துள்ளார். இதன்படி கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றத்தடுப்பு பிரிவு போலீஸ் ஏ.டி.எஸ்.பியாக இருந்த மணிகண்டன், நீலகிரி மாவட்ட சைபர் கிரைம் பிரிவின் ஏ.டி.எஸ்.பியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கரூர் மாவட்ட காவல்துறையின் தலைமையக பிரிவின் ஏ.டி.எஸ்.பியாக இருந்த பிரேமானந்தன், கோவை மாவட்ட காவல்துறையின் தலைமையக பிரிவின் ஏ.டி.எஸ்.பியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். நீலகிரி காவல்துறையின் தலைமையக ஏ.டி.எஸ்.பியாக இருந்த தங்கவேல், காஞ்சிபுரம் மாவட்ட சைபர் கிரைம் பிரிவின் ஏ.டி.எஸ்.பியாகவும், திருவண்ணாமலை மாவட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றத்தடுப்பு பிரிவின் ஏ.டி.எஸ்.பியாக இருந்த சவுந்தரராஜன், நீலகிரி மாவட்ட காவல்துறையின் தலைமையகபிரிவின் ஏ.டி.எஸ்.பியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

# வெம்பக்கோட்டை அகழாய்வில் சுடுமண்ணாலான ஆண் உருவ பொம்மை கண்டெடுப்பு



சென்னை, டிச.28

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அருகே உள்ள விஜயகரிசல்குளத்தில் 3ம் கட்ட அகழாய்வு பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. அகழாய்வில் இதுவரை 16 குழிகள் தோண்டப்பட்டுள்ளன.

கூடுதலாக தோண்டப்பட்ட குழியில் பியான்ஸ் எனப்படும் மூலப்பொருளால் தயாரிக்கப்பட்ட உருண்டை வடிவ மணி, மாவு கற்களால் செய்யப்பட்ட நீள் வட்ட வடிவ மணிகள், அலங்கரிக்கப்பட்ட சங்கு வளையல், கண்டெடுக்கப்பட்டன. இதுவரை 2,850க்கும் மேற்பட்ட பழங்கால பொருட்கள் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், இன்றைய அகழாய்வு பணியின் போது, சுடுமண்ணாலான சிவப்பு வண்ணம் தீட்டப்பட்ட, சிகை அலங்காரத்துடன் கூடிய ஆண் உருவ பொம்மை உடைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டு உள்ளது. முதல் இரண்டு கட்டங்களை விட 3ம் கட்ட அகழாய்வில் தொடர்ந்து கல்மணிகள் அதிகளவு கிடைத்து வருவதாக அகழாய்வு இயக்குனர் கூறினார்.

# பாம்பன் புதிய ரெயில் பாலம் 100 சதவீதம் தயார் தெற்கு ரெயில்வே அதிகாரி

ராமநாதபுரம், டிச.28

ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் கடலின் நடுவே ரூ.545 கோடியில் சுமார் 2 கிலோமீட்டர் நீளத்திற்கு புதிதாக ரெயில் பாலம் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது.

இந்த பாலத்தின் மையப்பகுதியில் கப்பல்கள் கடந்து செல்லும்போது திறந்து மூடும் வகையில் 77 மீட்டர் நீளமும், 650 டன் எடையும் கொண்ட செங்குத்து வடிவிலான தூக்குப்பாலமும் அமைக்கப்பட்டு உள்ளது. புதிய ரெயில் பால பணிகள் முடிவடைந்துவிட்டன. இதையடுத்து ரெயில்வே அதிகாரிகள், பாம்பம் புதிய ரெயில் பாலத்தை பல்வேறு கட்டங்களாக ஆய்வு செய்து வருகின்றனர். நேற்று முன் தினம் மதுரை ரெயில்வே கோட்ட மேலாளர் சரத்ஸ்ரீ வத்சவா, பாம்பன் புதிய ரெயில் பாலத்தை ஆய்வு செய்தார். இந்த நிலையில் புதிய பாலத்தில் இன்றும் ரெயில்வே அதிகாரிகள் ஆய்வு செய்தனர். கப்பல் செல்வதற்காக தூக்கு பாலத்தை மேலே எழுப்பி அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

அப்போது தெற்கு ரெயில்வே அதிகாரி சீனிவாசன் செய்தியாளர்களிடம் கூறியதாவது; "பாம்பன் கடலில் அமைக்கப்பட்டுள்ள புதிய ரெயில் பாலம் 100 சதவீதம் தயாராக உள்ளது. பழைய பாலத்தைப் போலவே புதிய ரெயில் பாலமும் 100 ஆண்டை கடந்தும் நிற்கும். பாலத்தில் 75 கிலோ மீட்டர் வேகத்தில் ரெயில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. என்றார்.

# தமிழகத்தில் கரும்பு விலையை குறைத்து விவசாயிகள் வயிற்றில் அடிப்பது தான் திராவிட மாடலா?: ராமதாஸ்

சென்னை, டிச.28

பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

பஞ்சாப் மாநிலத்தில் நடப்பு அரவைப் பருவத்தில் ஒரு டன் கரும்பு ரூ.4100 என்ற விலையில் கொள்முதல் செய்யப்படும் என்று அம்மாநில முதல்மந்திரி பகவந்த்சிங் மான் அறிவித்திருக்கிறார். இதன் மூலம் இந்தியாவிலேயே கரும்புக்கு அதிக கொள்முதல் விலை வழங்கும் மாநிலம் என்ற பெருமையை பஞ்சாப் தக்க வைத்துக் கொண்டுள்ளது. உழவர்கள் நலனில் அக்கறை கொண்டு கரும்பு விலையை இந்த அளவுக்கு உயர்த்தியிருப்பது பாராட்டத்தக்கது.

ஆனால், தமிழ்நாட்டில் நடப்புப்பருவத்தில் ஒரு டன்னுக்கான கொள்முதல் விலை ரூ.3150 மட்டும் தான். இது மத்திய அரசு அறிவித்த விலை தான். தமிழ்நாடு அரசு சார்பில் கடந்த ஆண்டு டன்னுக்கு ரூ.215 ஊக்கத்தொகை வழங்கப்பட்ட நிலையில், நடப்பாண்டில் ஊக்கத்தொகை எதுவும் இதுவரை அறிவிக்கப்படவில்லை. அதனால் பஞ்சாப் மாநிலத்தில் வழங்கப்படுவதை விட தமிழ்நாட்டில் டன்னுக்கு ரூ.950 குறைவாக கொள்முதல் விலை வழங்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு கணக்கிட்டு பார்த்தால் ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ.38,000 இழப்பு ஏற்படும். இப்படியெல்லாம் விவசாயிகளின் வயிற்றில் அடிப்பது தான் திராவிட மாடல் அரசின் சாதனையா?

2024, 25ம் ஆண்டுக்கான அரவைப் பருவத்தில் 10.25 சதவீதம் சர்க்கரைத் திறன் கொண்ட கரும்புக்கு டன்னுக்கு 3,400 ரூபாயும், 9.50 சதவீதம் அல்லது அதற்கும் குறைவானத் திறன் கொண்ட கரும்புக்கு 3150 ரூபாயும் கொள்முதல் விலையாக வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது.

பஞ்சாப் கரும்பு 10 சதவீதம் சர்க்கரைத் திறன் கொண்டது என்பதால் அதற்கு மத்திய அரசின் விலை ரூ.3400, மாநில அரசின் ஊக்கத்தொகை ரூ.710 ஆகும். தமிழக கரும்புகளுக்கு அதிகபட்ச சர்க்கரைத் திறன் 9.50 சதவீதம் தான் இருக்கும் என்பதால், அவற்றுக்கு ரூ.3150 மட்டும் தான் கிடைக்கும்.

கரும்புக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிக்கும் கொள்கை கடைபிடிக்கப்படுவது தான் பஞ்சாபில் உழவர்களுக்கு அதிக விலை கிடைக்க காரணம் ஆகும். மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட ஊக்கத்தொகையை சர்க்கரை ஆலைகளே வழங்கி விடும் என்பதால் அரசுக்கு



எந்த கூடுதல் செலவும் இல்லை; அதே நேரத்தில் உழவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும்.

தமிழ்நாட்டிலும் 2017ம் ஆண்டு வரை குறைந்தபட்ச ஆதரவு விலை அறிவிக்கும் முறை தான் இருந்தது. ஓ.பன்னீர் செல்வம் முதல்அமைச்சராகஇருந்த போதுதான் அந்த முறை கைவிடப்பட்டு ஊக்கத்தொகை வழங்கும் முறை அறிமுகம் செய்யப்பட்டது. 2016ம் ஆண்டில் ஒரு டன் கரும்புக்கு ரூ.650 ஊக்கதொகை சேர்த்து குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிக்கப்பட்டது. அதே முறை நீடித்திருந்தால் ஊக்கத்தொகை இப்போது ரூ.1000 ஆக உயர்ந்திருக்கும். அதனால் ஒரு டன் கரும்புக்கு ரூ.4150 கிடைத்திருக்கும். ஆனால், நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்ததிமுகஅதை செயல்படுத்தத் தவறியதால் தான் உழவர்களுக்கு பேரிழப்பு ஏற்படுகிறது.

குறைந்தபட்ச ஆதரவு விலை முறையை நடைமுறைப்படுத்துவதால் அரசுக்கு எந்த நிதியிழப்பும் ஏற்படாது. மாறாக, ஊக்கத்தொகை முழுவதையும் சர்க்கரை ஆலைகள் ஏற்றுக்கொள்ளும் என்பதால், அரசால் வழங்கப்படும் ஊக்கத்தொகை அரசுக்கு மிச்சமாகும். ஆனால், சர்க்கரை ஆலைகளுக்கு அதிக செலவு ஏற்படும் என்பதால் அதைத் தாங்கி கொள்ள முடியாது என்பதால் அந்த முறையை செயல்படுத்த திமுக அரசு மறுக்கிறது. இது விவசாயிகளுக்கு இழைக்கப்படும் துரோகம் ஆகும்.

தமிழகத்தில் ஒரு டன் கரும்பு உற்பத்திக்கு ரூ.3500 செலவாகிறது எனும் போது 50 சதவீதம் லாபமாக ரூ.1750 சேர்த்து டன்னுக்கு ரூ.5250 கொள்முதல் விலை வழங்க வேண்டும். குறைந்தது டன்னுக்கு ரூ.5000 ஆவது வழங்க வேண்டும். மத்திய அரசு அதன் கொள்முதல் விலையாக டன்னுக்கு ரூ.4000 அறிவிக்க வேண்டும். தமிழக அரசு அதன் பங்குக்கு சர்க்கரை ஆலைகள் மூலம் ரூ.1000 ஊக்கத்தொகையாக வழங்க வேண்டும் என்று அறிவித்து விவசாயிகளுக்கு ஒரு டன் கரும்புக்கு ரூ.5000 கொள்முதல் விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அண்ணா பல்கலை. பாலியல் வழக்கு: யாரை காப்பாற்ற அரசு முயற்சிக்கிறது? அண்ணாமலை கேள்வி

சென்னை, டிச.28

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அங்கு படித்த என்ஜினீயரிங் மாணவி ஒருவர், பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த கொடூர சம்பவம் குறித்து கோட்டூர்புரம் போலீசார் 8 சட்டப்பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து குற்றவாளி ஞானசேகரன் என்பவரை கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

இந்த நிலையில், மாணவி பாலியல் வன்கொடுமைவழக்கு தொடர்பாக அமைச்சர் மற்றும் சென்னை காவல் ஆணையர்பேசியதுமுரண்பாடாக இருப்பதாக பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"அண்ணா பல்கலைக்கழக பாலியல் வழக்கு விசாரணை செல்லும் விதம், பல சந்தேகங்களை எழுப்புகிறது.

உயர் கல்வித்துறை அமைச்சர், இன்று ஊடகங்களில் பேசுகையில், முதலில் காவல்துறையிடம் புகார் அளித்த பிறகே, பல்கலைக்கழகத்துக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதுஎன்றுகூறியிருக்கிறார். ஆனால், நேற்று ஊடகங்களைச் சந்தித்த சென்னை காவல்துறை ஆணையர், பல்கலைக்கழகத்தின் குழு மூலமாகவே காவல்துறைக்குப் புகார் வந்தது என்று கூறுகிறார். ஏன் இத்தனை முரண்பாடுகள்? உண்மையில் யாரைக் காப்பாற்ற திமுக அரசு முயற்சிக்கிறது? உண்மையில் என்ன நடந்தது?



அதுமட்டுமின்றி, பாதிக்கப்பட்ட மாணவி, குற்றவாளிக்குத் தொலைபேசி அழைப்பு வந்ததாகத் தெரிவித்ததாகவும், சார் என்று கூறி, குற்றவாளி பேசியதாகவும் தெரிவித்ததாக முதலில் செய்திகள் வெளிவந்தன. ஆனால், அதனை அப்படியே வெளிவராமல் மறைக்கும் முயற்சி நடப்பதாகத் தெரிகிறது. இந்தக் குற்றத்தில்தொடர்புடையவர்கள் அனைவர் மீதும் நடவடிக்கைஎடுக்கப்படும்வரை தமிழ்நாடு பாஜக, இதனை விடப்போவதில்லை. பிரச்சினையை மடை மாற்றி, உண்மையை மறைத்துவிடலாம் என்ற நோக்கம் திமுக அரசுக்கு இருக்குமேயானால், திமுக அரசுக்கும் இந்தக் குற்றத்தில் தொடர்பு இருப்பதாகத் தான் கருத முடியும்."

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

# அண்ணாமலையின் செயல் கேலிக்கூத்து ஆர்.எஸ்.பாரதி விமர்சனம்

சென்னை, டிச.28

திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

அண்ணா பல்கலைக்கழகம் யாருடைய நிர்வாகத்தின் கீழ் இயங்குகிறது என்பதை எதிர்க்கட்சிகள் தெரிந்து கொள்வது அவசியம். துணைவேந்தர் அனுமதியின்றி அண்ணா பல்கலை. வளாகத்திற்குள் யாரும் நுழைய முடியாது. சம்பவம் நடந்த சில மணி நேரத்திலேயே குற்றவாளியை தமிழக காவல் துறை கைது செய்தது. பல்கலை. வளாகத்தில் பாதுகாப்பு இல்லை என்றால் அதற்கு யார் பொறுப்பேற்க முடியும்.



அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் எதிர்க்கட்சியினர் அரசியல் செய்கின்றனர். கைதான ஞானசேகரன் திமுகவைச் சேர்ந்தவர் என பொய் குற்றச்சாட்டுகளை கூறுகின்றனர். அனைவருக்குமான அரசாக திமுக அரசு உள்ளது. அதிமுக ஆட்சியில் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் என்ன நடவடிக்கைகள் எடுத்தீர்கள்?. பெண்கள், குழந்தைகளை பாதுகாக்கும் அரசாக திமுக அரசு உள்ளது.

சாட்டையால் அடித்துக்கொண்டபாஜகமாநில தலைவர் அண்ணாமலையின் செயல் கேலிக்கூத்தாக உள்ளது; வேடிக்கையானது. பகுத்தறிவுவாதிகள்யாரும்ஏற்றுகொள்ள மாட்டார்கள். அண்ணாமலையில் போராட்டத்தை பார்த்து மக்கள் சிரிக்கிறார்கள். உத்தரபிரதேசம் மற்றும் பாஜக ஆளும் மாநிலங்களில் நடக்கும் சம்பவங்களுக்கு அண்ணாமலை தினமும் சாட்டையால் அடித்துக் கொள்ள வேண்டும். காலம் முழுவதும் அண்ணாமலையால் காலணி அணிய முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

# 'நிர்பயா சம்பவத்தை விட இது கொடுமையானது' பொள்ளாச்சி ஜெயராமன்

கோவை, டிச.28

சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக் கழகத்தில் மாணவி ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது. பாதிக்கப்பட்ட மாணவி கொடுத்த புகாரின் பேரில், கோட்டூர்புரம் அனைத்து மகளிர் போலீசார் 4 சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குபதிவு செய்து ஞானசேகர் என்ற நபரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில், அண்ணா பல்கலைக்கழகத்தில் நடந்த பாலியல் பலாத்கார சம்பவம் டெல்லியில் நடந்த நிர்பயா பாலியல் பலாத்காரம் மற்றும் கொலை சம்பவத்தை விட கொடுமையானது என அ.தி.மு.க. எம்.எல்.ஏ. பொள்ளாச்சி ஜெயராமன் தெரிவித்துள்ளார். இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது;

"உலகப் புகழ் பெற்ற அண்ணா பல்கலைக்கழகத்தில் மாணவி ஒரு சீர்குலைக்கப்பட்டு, தமிழகமே தலைகுனியும் வகையில் ஒரு சம்பவம் நடந்துள்ளது. இது டெல்லியில் நடந்த நிர்பயா சம்பவத்தை



விட கொடுமையானது. இதில் தி.மு.க.விற்கு தொடர்பு இருப்பதாக சொல்லப்படுவது வெட்கக்கேடானது.

இதற்கு தி.மு.க.வின் தோழமை கட்சிகள் என்ன சொல்வார்கள் என தெரியவில்லை. ஆனால் அ.தி.மு.க. சார்பில் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளார்." இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# கல்லூரி மாணவியை ரெயில் முன் தள்ளி கொன்ற வழக்கு: கைதான சதீஷ் குற்றவாளி என தீர்ப்பு

சென்னை, டிச.28

சென்னையை அடுத்த ஆலந்தூர் போலீஸ் குடியிருப்பைச் சேர்ந்தவர் மாணிக்கம். சொந்தமாக கார் வைத்து வாடகைக்கு ஓட்டி வந்தார். இவரது மனைவி ராமலட்சுமி, ஆதம்பாக்கம் போலீஸ் நிலையத்தில் ஏட்டாக பணியாற்றினார். இவர்களது மூத்த மகள் சத்யா, தியாகராயநகரில் உள்ள தனியார் கல்லூரியில் பி.சி.ஏ. 3ம் ஆண்டு படித்து வந்தார்.

இவர், அதே பகுதியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற சப் இன்ஸ்பெக்டர் தயாளன் என்பவரது மகன் சதீஷ் என்பவரை காதலித்து வந்தார். பெற்றோர் கண்டித்ததால் சத்யா, திடீரென்று காதலை கைவிட்டார். இதனால் மனமுடைந்த சதீஷ், கடந்த 13.10.2022 அன்று கல்லூரி செல்வதற்காக பரங்கிமலை ரெயில் நிலையத்தில் காத்திருந்தசத்யாவை, அந்த வழியாக வந்த ரெயில் முன்பு தள்ளி படுகொலை செய்தார்.

தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய சத்யா கொலை வழக்கு தொடர்பாக சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணை நடத்தி சதீஷை கைது செய்தனர். போலீசாரின் விசாரணை முடிவடைந்த நிலையில் சதீஷ் மீது 11.1.2023 அன்று சைதாப்பேட்டை கோர்ட்டில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இதன்பின்பு, இந்த வழக்கு சென்னை மகளிர் கோர்ட்டுக்கு மாற்றம் செய்யப்பட்டது.



இந்த வழக்கில் போலீசார் தரப்பில் ஆஜராவதற்காக ரவீந்திரநாத் ஜெயபால் என்பவர் சிறப்பு அரசு வக்கீலாக நியமிக்கப்பட்டார். இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் 70 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. அனைத்து தரப்பு விசாரணையும் முடிவடைந்த நிலையில், வழக்கில் 27ந் தேதி (அதாவது இன்று) தீர்ப்பு கூறப்படும் என மகளிர் கோர்ட்டு அறிவித்தது.

அதன்படி, கல்லூரி மாணவியை ரெயில் முன் தள்ளி கொன்ற வழக்கு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது வழக்கில் கைதான சதீஷ் குற்றவாளி என மகளிர் கோர்ட்டு தீர்ப்பு அளித்துள்ளது. மேலும் சதீஷுக்கான தண்டனை விபரங்கள் வரும் 30ம் தேதி அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கண்காணிக்க வேண்டும்': மதுரை ஆதீனம்

நெல்லை, டிச.28

அரசாங்கத்தால் மட்டுமே அனைத்து பிரச்சினைகளையும் தடுக்க முடியாது என்றும், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கண்காணிக்க வேண்டும்என்றும்மதுரை ஆதீனம் தெரிவித்துள்ளார். இது குறித்து நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் கூறியதாவது;

"பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கண்காணித்து வளர்க்க வேண்டும். ஒரு குடும்பத்தை கட்டி காப்பாற்றுவதே கஷ்டமாக இருக்கிறது, அப்படி இருக்கும் போது அரசாங்கம் என்ன தான் செய்ய முடியும்? மத்திய அரசோ, அல்லது பிரதமரோ என்ன செய்வார்கள்?



ஒரு பழைய பாடலில், 'பிள்ளை பெற்று விட்டால் போதுமா, பேணி வளர்க்க வேண்டும் தெரியுமா?'என்றுவரும். தங்கள் குழந்தைகளை கண்காணித்து வளர்க்க வேண்டிய கடமை பெற்றோருக்கு உள்ளது. பிள்ளைகளை சமய ஒழுக்கம் உள்ளவர்களாகவும், சமுதாய ஒழுக்கம் உள்ளவர்களாகவும் வளர்க்க வேண்டும்."

இவ்வாறு மதுரை ஆதீனம் தெரிவித்தார்.

# 'மன்மோகன் சிங் சிறந்த பொருளாதார நிபுணர்' நடிகர் ரஜினிகாந்த்



சென்னை, டிச.28

முன்னாள் பிரதமரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான மன்மோகன் சிங் (வயது 92), உடல்நலக்குறைவு காரணமாக டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதனையடுத்து, டெல்லியில் உள்ள வீட்டில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்குதலைவர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். இந்நிலையில், சென்னை விமானநிலையம் வந்த நடிகர் ரஜினிகாந்த் முன்னாள்பிரதமர்மன்மோகன் சிங்கின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், 'முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் நல்ல மனிதர், சிறந்த பொருளாதார நிபுணர். அவரது மறைவுக்கு என் இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்' என்றார். மன்மோகன் சிங்கின் உடல் முழு அரசு மரியாதையுடன் நாளை தகனம் செய்யப்பட உள்ளது.

# மேலூரில் கட்டி முடிக்கப்பட்ட புதிய பேருந்து நிலையத்தை உடனடியாக திறக்க வேண்டும்: டி.டி.வி.தினகரன் பேட்டி

சென்னை, டிச.28

அ.ம.மு.க பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் தனது எக்ஸ் வலைத்தளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது,

மதுரை மாவட்டம் மேலூரில் கட்டிமுடிக்கப்பட்டும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வராத புதிய பேருந்து நிலையம் பொதுமக்கள் நலனில் அலட்சியம் காட்டும் திமுக அரசு நிர்வாகத்தின் செயல்பாடு கடும் கண்டனத்திற்குரியது.

மதுரை மாவட்டம் மேலூரில் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையத்திற்கான பணிகள் முழுமையாக முடிந்த பின்னரும் திறக்கப்படாத காரணத்தினால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

நாள்தோறும் நூற்றுக்கணக்கான பேருந்துகள் வந்து செல்லும் இந்த பேருந்து நிலையம் பயன்பாட்டிற்கு வராத காரணத்தினால், பள்ளிக்குழந்தைகள் தொடங்கி கல்லூரி மாணவர்கள், வேலைக்குச் செல்வோர் என அனைத்து தரப்பினருமே வெயிலிலும், மழையிலும் பேருந்துகளுக்காக காத்திருக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.



6.60 கோடி ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட புதிய பேருந்து நிலையத்தை விரைந்து பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என பலமுறை கோரிக்கை விடுத்தும் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என மதுரை மாவட்ட நிர்வாகத்தின் மீது அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

எனவே, இனியும் அலட்சியப் போக்குடன் செயல்படாமல் மதுரை மேலூரில் கட்டி முடிக்கப்பட்ட புதிய பேருந்து நிலையத்தை உடனடியாக திறந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என மதுரை மாவட்ட நிர்வாகத்தையும், தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியப் பொருளாதாரம் தன் ஒருசிறகை இழந்துவிட்டது மன்மோகன்சிங் மறைவுக்கு வைரமுத்து இரங்கல்

சென்னை, டிச.28

காங்கிரஸ் மூத்த தலைவரும் முன்னாள் பிரதமருமான மன்மோகன் சிங் உடல்நலக்குறைவால் நேற்று காலமானார். அவரது மறைவுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் மன்மோகன் சிங் மறைவுக்கு கவிஞர் வைரமுத்து இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் வலைத்தளப்பக்கத்தில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்திருப்பதாவது,

மன்மோகன் சிங் மறைந்து விட்டார். இந்தியப் பொருளாதாரம் தன் ஒருசிறகை இழந்துவிட்டது. இந்தியாவை வழிநடத்திய ஒரு கல்வி மேதை காலமாகிவிட்டார்.

அவர் கொண்டுவந்த தாராளமயமாக்கலுக்குப் பிறகுதான் செயற்கை சுவாசத்திலிருந்த இந்தியப் பொருளாதாரம் சொந்தமாக சுவாசிக்கத் தொடங்கியது. தேசத்தை நெருக்கடியில் கட்டியாண்ட நிர்வாகப் புலி அவர். ஓர் அரசியல்வாதிக்குரிய அழிச்சாட்டியங்களை எல்லாம் அவரது கல்வி துடைத்தெறிந்து கண்ணியவான் ஆக்கியது.

உதட்டுக்குத் தெரியாத அவரதுபுன்னகைஎனக்கு மிகப் பிடிக்கும். காங்கிரஸ் கட்சிக்கு மட்டுமல்ல இந்தியப் பரப்புக்கே இது ஓர் இழப்பு. அவரது இழப்பை உணரும் அனைவருக்கும் என் ஆழ்ந்த இரங்கல். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகனி

28.12.2024

# தேசிய நெடுஞ்சாலையில் ஆம்புலன்ஸ் கவிழ்ந்து விபத்து 6 பேர் காயம்

செங்கல்பட்டு, டிச.28

திருப்பூரில் இருந்து நோயாளியை ஏற்றிக் கொண்டு தனியார் ஆம்புலன்ஸ் சென்னை நோக்கி வந்து கொண்டிருந்தது. அந்த ஆம்புலன்சில் நோயாளி உள்பட 6 பேர் பயணித்தனர்.

இந்நிலையில், செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஆம்புலன்ஸ் இன்று காலை வந்து கொண்டிருந்தது. அப்போது திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த ஆம்புலன்ஸ் சாலையில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் ஆம்புலன்சில் பயணித்த நோயாளி உள்பட 6 பேர் காயமடைந்தனர். இதையடுத்து, காயமடைந்த 6 பேரும் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர். இந்த விபத்து குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த விபத்தால் சென்னை மார்க்கத்தில் போக்குவரத்து சற்று பாதிக்கப்பட்டது.

# அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் மீது வழக்குப்பதிவு



சென்னை, டிச.28

சென்னை கிண்டி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம்,தமிழ்நாடு முழுவதும் பெரும் அதிர்வலையையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவத்தை கண்டித்து பல்வேறு மாணவர் அமைப்பினரும், அரசியல் கட்சியினரும் தமிழ்நாடு முழுவதும் போராட்டம் நடத்தினர். அந்த வகையில், மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட விவகாரத்தை கண்டித்து, சென்னை கிண்டியில்உள்ளஅண்ணா பல்கலைக்கழகம் முன்பு முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தலைமையில் அதிமுகவினர் போராட்டம் நடத்தினர். இந்த போராட்டத்துக்கு மாவட்ட செயலாளர்கள் விருகை ரவி, கே.பி.கந்தன், அசோக் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். அப்போது ஜெயக்குமார் உள்ளிட்டோரை போலீசார் தடுத்து நிறுத்தினர்.

உடனே அதிமுகவினர் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனையடுத்து ஜெயக்குமார் உள்ளிட்ட முன்னாள் அமைச்சர்கள் உள்பட 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை போலீசார் கைது செய்து அருகில் உள்ள திருமண மண்டபத்திற்கு அழைத்து சென்றனர். பின்னர் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், அண்ணா பல்கலைக்கழகத்தை முற்றுகையிட முயன்ற அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், விருகை என்.ரவி உட்பட 900 பேர் மீது கோட்டூர்புரம் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். அனுமதியின்றி கூடுதல், சாலை மறியல் செய்தல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. அதைபோல மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்தைகண்டித்து, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் அனுமதியின்றி போராட்டம் நடத்தியதாக பாஜகவினர் 417 பேர் மீதும் கோட்டூர்புரம் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

# மதுரை, திருச்சியில் டைடல் பூங்கா: கட்டுமான பணிகளுக்கு சுற்றுச்சூழல் அனுமதிகோரி விண்ணப்பம்




சென்னை, டிச.28

தமிழ்நாடு சட்டசபையில் கடந்த பிப்ரவரியில் பட்ஜெட் உரையின் போது, திருச்சி மற்றும் மதுரையில் டைடல் பார்க் நிறுவப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதையடுத்து மதுரை மற்றும் திருச்சியில் டைடல் பூங்காவை கட்டுவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டது. இந்த நிலையில்,டைடல்பூங்கா கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக சுற்றுச்சூழல் அனுமதிகோரி தமிழக அரசிடம் டைடல் லிமிடட் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது.

திருச்சியில் திருச்சி மதுரை நெடுஞ்சாலையில் பஞ்சப்பூர் கிராமம் அருகே ஒருங்கிணைந்த பஸ் நிலையம் கட்டப்பட்டு வரும் இடத்துக்கு அருகே புதிதாக டைடல் பூங்கா அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அங்கு 5.58 லட்சம் சதுர அடி பரப்பளவில் ரூ.315 கோடி செலவில் 5,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தரை மற்றும் 6 தளங்களுடன் கூடிய புதிய டைடல் பூங்கா அமைக்கப்பட உள்ளது

அதுபோல், மதுரையில் மாட்டுத்தாவணி பஸ் நிலையம் அருகே மாநகராட்சிக்கு சொந்தமான 9.97 ஏக்கர் நிலத்தில் 5.67 லட்சம் சதுர அடி பரப்பளவில் டைடல் பார்க் கட்டிடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. ரூ.289 கோடி செலவில் கட்டப்படும் டைடல் பார்க்கில் 5,500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்புள்ளது. தரை மற்றும் 12 தளங்களுடன் அந்த டைடல் பூங்கா அமைக்கப்பட உள்ளது.

# தேர்தல் பத்திரம் திட்டம் ரத்து செய்யப்பட்டாலும் தடை இல்லாமல் நிதிகளை குவிக்கும் பா.ஜ.க.: செல்வப்பெருந்தகை குற்றச்சாட்டு



சென்னை, டிச.28

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் வெளியான தகவலின்படி, பா.ஜ.க. நேரடியாக ரூ.2 ஆயிரத்து 244 கோடி நன்கொடையை 202324ம் ஆண்டு பெற்றிருக்கிறது. கடந்த 202223ல் தேர்தல் பத்திர நன்கொடை மூலம் பெற்றதைவிட 212 சதவீதம் அதிகமான நிதியை பா.ஜ.க. பெற்றிருக்கிறது. தேர்தல் பத்திர நன்கொடை திட்டம் சுப்ரீம் கோர்ட்டால் ரத்து செய்யப்பட்டு இருந்தாலும் வருமான வரித்துறை, சி.பி.ஐ., அமலாக்கத்துறையை பயன்படுத்தி தொடர்ந்து கார்ப்பரேட் நிறுவனங்களிடம் இருந்து பெருமளவில் நிதியை நேரடியாக பெற்றிருப்பதை இந்த தகவல் உறுதிப்படுத்துகிறது.

பா.ஜ.க.வின் ஊழல் ஒன்றன் பின் ஒன்றாக அம்பலமாகி உள்ளது. சுப்ரீம் கோர்ட்டு தேர்தல் பத்திர நன்கொடை திட்டத்தை ரத்து செய்திருந்தாலும் பா.ஜ.க. நிதி பெறுவதற்கு எந்த தடையும் இல்லாமல் நிதிகளை குவித்து வருகிறது. பா.ஜ.க. குவித்து வருகிற நிதி இந்திய ஜனநாயகத்திற்கு குறிப்பாக, தேர்தல் களத்தில் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுக்கு மிகவும் பாதிப்பாக அமைகிற சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த நிலை தொடர்ந்தால் இந்தியாவின் ஜனநாயகத்திற்கே பெரும் ஆபத்தாக முடியும்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# மன்மோகன் சிங் மறைவு நாட்டிற்கே பேரிழப்பு: உதயநிதி ஸ்டாலின்



சென்னை, டிச.28

காங்கிரஸ்மூத்ததலைவரும் முன்னாள் பிரதமருமான மன்மோகன் சிங் உடல்நலக்குறைவால் காலமானார். அவரது மறைவுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் மன்மோகன் சிங் மறைவுக்கு தமிழக துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்,

"முன்னாள்பிரதமர்டாக்டர் மன்மோகன் சிங் மறைந்தார் என்கிற செய்தி கவலைகொள்ளச் செய்கிறது. இந்திய ஒன்றியத்தின் பொருளாதாரத்தை மன்மோகன்சிங்கின் காலகட்டத்திற்கு முன் பின் என்று குறிப்பிடும் அளவுக்கு மாற்றியமைத்தவர். முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பாசத்துக்கும், மதிப்புக்கும் உரியவர். நூறு நாள் வேலைத்திட்டம் உட்பட பல ஆக்கப்பூர்வமான திட்டங்கள் மூலம் கிராமப்பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டவர். 10 ஆண்டுகள் பிரதமர் பொறுப்பில் இருந்து நிறைய சாதித்த நிறைகுடம் மன்மோகன்சிங் அவர்கள். அவரது ஆட்சிக்காலத்தில் தமிழ்நாடு பெற்றத் திட்டங்களும் அடைந்த வளர்ச்சியும் அதிகம்.

உலகப் பொருளாதாரத்தின் திசைவழியை சரியாகப் புரிந்துகொண்டு இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளை வகுத்த மன்மோகன் சிங் அவர்களின் மறைவு நாட்டிற்கே பேரிழப்பாகும். அவர்களின் மரணத்துக்கு எனது ஆழந்த இரங்கல். அவரை இழந்து வாடும் காங்கிரஸ் பேரியக்கத்தினர் குடும்பத்தினர் நண்பர்களுக்கு எனது ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தோட்டத்தில் கஞ்சா செடி பயிரிட்ட விவசாயி கைது

ஈரோடு, டிச.28

ஈரோடு மாவட்டம் தாளவாடி அருகே சூசைபுரம் கிராமத்தில் உள்ள தோட்டத்தில் கஞ்சா செடி பயிரிட்டுள்ளதாக தாளவாடி போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அதைத்தொடர்ந்து போலீசார் அங்கு சென்று சோதனையிட்டனர். அப்போது தோட்டத்தில் 4 கஞ்சா செடிகள் பயிரிட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து 4 கஞ்சா செடிகளை போலீசார் பறிமுதல் செய்தனர். மேலும் இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து தோட்டத்தில் கஞ்சா செடி பயிரிட்ட விவசாயி சுப்பிரமணி (வயது 63) என்பவரை கைது செய்தனர்.

# 'பேபி ஜான்' படத்தின் முதல் நாள் வசூல் விவரம்




ஷங்கரின் உதவி இயக்குனராக அறிமுகமாகி, இன்று பலஹிட்படங்களைஇயக்கிவருபவர்பிரபலஇயக்குனர் அட்லி. இவரது இயக்கத்தில் கடந்த 2016ம் ஆண்டு விஜய் நடிப்பில் வெளியான திரைப்படம் 'தெறி'. இந்த படம் மிகப்பெரிய வெற்றி பெற்ற நிலையில் இந்தியில் 'பேபி ஜான்' என்ற பெயரில் ரீமேக் செய்யப்பட்டுள்ளது.

இந்த படத்தை அட்லியின் மனைவி பிரியாவின் ஏ பார் ஆப்பிள் ஸ்டுடியோஸ், ஜியோ ஸ்டுடியோஸ் மற்றும் முராத் கெதானியின் சினி1 ஸ்டுடியோஸ் ஆகியவை இணைந்து "பேபி ஜான்" என்ற படத்தை தயாரித்துள்ளன.

அட்லியின் உதவி இயக்குனர்களில் ஒருவரான காலிஸ் என்பவர் இயக்கியுள்ள இந்த படத்தில் விஜய் நடித்த வேடத்தில் பிரபல பாலிவுட் நடிகர் வருண் தவான் நடித்துள்ளார். இந்த படத்தின் நாயகிகளாக கீர்த்தி சுரேஷ் மற்றும் வாமிகா கபி ஆகியோர் நடித்துள்ளனர். இசையமைப்பாளர் தமன் இந்தப் படத்துக்கு இசையமைத்துள்ளார்.

இப்படம் கிறிஸ்துமஸ் விடுமுறையான நேற்று திரையரங்குகளில் வெளியானது. ஆக்சன் படமான இது ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை பெற்று வருகிறது. அந்த வகையில், முதல் நாளில் இப்படம் சுமார் ரூ.12.50 கோடி வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது. இப்படம் தொடர்ந்து வசூலை குவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கான்ஸ்டாசுடன் மோதல்: விராட் கோலிக்கு தண்டனை வழங்கிய ஐ.சி.சி... விவரம்




இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட பார்டர் கவாஸ்கர் கோப்பை டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் 3 போட்டிகள் முடிவில் தொடர் 11 என்ற கணக்கில்சமனில்உள்ளது.இந்நிலையில்இவ்விருஅணிகளுக்குஇடையிலான 4வது டெஸ்ட் போட்டி இன்று மெல்போர்னில் தொடங்கியது. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் தேர்வு செய்த ஆஸ்திரேலிய முதல் நாள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 311 ரன்கள் குவித்துள்ளது. நாளை 2வது நாள் ஆட்டம் நடைபெற உள்ளது. முன்னதாக இந்த போட்டியில் ஆஸ்திரேலிய அணியில் அறிமுக வீரராக களமிறங்கிய சாம் கான்ஸ்டாஸ் அதிரடியாக விளையாடி 60 ரன்களில் ஆட்டமிழந்தார். இதனிடையே அவர் பேட்டிங் செய்தபோது 10வது ஓவரின் முடிவில் பந்தை கையில் எடுத்துக்கொண்டு ஓவர் மாற்றுவதற்காக விராட் கோலி நடந்து சென்றார். அதே பாதையில் எதிர்புறம் கான்ஸ்டாஸ் நடந்து வந்தார். அப்போது இருவரும் தங்களுடைய தோளில் நேருக்கு நேராக கொஞ்சம் பலமாக இடித்துக் கொண்டார்கள். இதனால் அவர்களுக்குள் வாக்குவாதம்எழுந்தது.உடனடியாகஅருகில்இருந்தஉஸ்மான்கவாஜாமற்றும்நடுவர்கள்உள்ளேபுகுந்துநிறுத்தினார்கள்.

ஆனால் அந்த இடத்தில் விராட் கோலிதான் வேண்டுமென்றே கான்ஸ்டாஸ் மீது மோதியதாக நேரலையில் ரிக்கி பாண்டிங் மற்றும் மைக்கேல் வாகன் போன்ற முன்னாள் வீரர்கள் விமர்சித்தார்கள். அந்த தருணத்தை மீண்டும் பார்க்கும்போது விராட் கோலிதான் கான்ஸ்டாஸ் மீது மோதியது தெரிகிறது. இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்நிலையில் இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்திய சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.), விராட் கோலி மீது தவறு உள்ளதை கண்டறிந்துள்ளது. இதனால் விராட் கோலிக்கு போட்டி கட்டணத்தில் இருந்து 20 சதவீதம் அபராதமும், ஒரு கருப்பு புள்ளியும் (டிமெரிட் புள்ளி) வழங்கி ஐ.சி.சி. தண்டனை விதித்துள்ளது.

# 100 படங்களை கடந்துவிட்டேன், எனினும் ... இயக்குனர் போஸ் வெங்கட்



'மெட்டி ஒலி' தொலைக்காட்சி தொடரில் நடித்து பிரபலமானவர் போஸ் வெங்கட். சின்னத்திரை தாண்டி பல திரைப்படங்களிலும் நடித்துள்ளார். கோ, சிவாஜி, தலைநகரம், கவண், தாம்தூம், சிங்கம், ராஜாதி ராஜா உள்ளிட்ட ஏராளமான படங்களில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து இருக்கிறார். சமீபத்தில் இவரது இயக்கத்தில் விமல் நடிப்பில் 'சார்' படத்தை இயக்கி இருந்தார். கல்வியின் அவசியத்தையும் கல்வி அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதை இப்படம் பேசியுள்ளது. இப்படம் நல்ல வரவேற்பை பெற்றது.

இந்த நிலையில், இயக்குனரும், நடிகருமான போஸ் வெங்கட் எக்ஸ் தளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், "100 படங்களை கடந்துவிட்டேன்.. எனினும் நம்மை நிரூபித்துக்கொண்டே இருக்க வேண்டியுள்ளது. 'கங்குவா, விடுதலை 2' ஆகிய படங்களில் நடிக்க நல் வாய்ப்பு கொடுத்த இயக்குனர் சிவா சார் மற்றும் வெற்றிமாறன் சார் இருவருக்கும் மனமார்ந்த நன்றிகள்" என்று தெரிவித்துள்ளார்.

# பாக்சிங் டே டெஸ்ட்: மாபெரும் சாதனை படைத்த கள நடுவர்



இந்தியா ஆஸ்திரேலியா இடையிலான பார்டர் கவாஸ்கர் கோப்பை தொடரின் 4வது டெஸ்ட் போட்டி மெல்போர்ன் மைதானத்தில் இன்று தொடங்கியது. கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு மறுநாள் தொடங்கும் இந்த போட்டி 'பாக்சிங் டே' என்ற பாரம்பரிய பெயரில் அழைக்கப்படுகிறது.

இந்த போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த ஆஸ்திரேலியா முதல் நாள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 311 ரன்கள் குவித்தது. ஸ்டீவ் சுமித் 68 ரன்களுடனும், கம்மின்ஸ் 8 ரன்களுடனும் களத்தில் உள்ளனர். இந்தியா தரப்பில் பும்ரா 3 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார்.

இந்த போட்டியில் கள நடுவராக ஜிம்பாப்வே முன்னாள் கேப்டன் ஆண்டி பைகிராப்ட் பணியாற்றி வருகிறார். இது நடுவராக இவரது 100வது போட்டியாக அமைந்துள்ளது.

இதன் மூலம் ஆண்கள் டெஸ்ட் கிரிக்கெட்டில் 100 போட்டிகளுக்கு நடுவராக பணியாற்றிய 4வது நபர் என்ற மாபெரும் சாதனையை அவர் படைத்துள்ளார். அந்த பட்டியல்: 1. ரஞ்சன் மதுகல்லே 225 போட்டிகள் 2. ஜெப் குரோவ் 125 போட்டிகள் 3. கிறிஸ் பிராட் 123 போட்டிகள் 4. ஆண்டி பைகிராப்ட் 100 போட்டிகள்

# எம்.டி.வாசுதேவன் நாயர் மறைவு கமல்ஹாசன் இரங்கல்



பிரபல மலையாள எழுத்தாளர் எம். டி. வாசுதேவன் நாயர் (91) இதய செயலிழப்பு காரணமாக கோழிக்கோடு பேபி மெமோரியல் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்றிரவு காலமானார். மலையாள இலக்கியம் மற்றும் திரையுலகில் அழியாத முத்திரை பதித்த எம்.டி. வாசுதேவன் நாயர் பத்ம பூஷண் விருது பெற்றவர். சிறந்த திரைக்கதைக்காக 4 தேசிய விருதுகளை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. அவரது மறைவுக்கு திரையுலகை சேர்ந்த பலர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், எழுத்தாளர் எம். டி. வாசுதேவன் நாயர் மறைவுக்கு நடிகர் கமல்ஹாசன் இரங்கல் தெரிவித்து தனது எக்ஸ் வலைதளப் பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், ஒரு மாபெரும் எழுத்துக்கலைஞனை இழந்திருக்கிறோம். மலையாள இலக்கிய உலகின் மிகப்பெரும் ஆளுமை எம்.டி.வாசுதேவன் நாயர் நம்மைவிட்டுப் பிரிந்திருக்கிறார். மலையாளத் திரை உலகுக்கு நான் அறிமுகமான 'கன்யாகுமரி' படத்தின் படைப்பாளராக அவருடன் நான் கொண்ட சிநேகத்துக்கு இப்போது ஐம்பது வயது. கடைசியாக, சமீபத்தில் வெளியான 'மனோரதங்கள்' வரை அந்த நட்பு தொடர்ந்தது. மகத்தான நாவல்களை மலையாள இலக்கிய உலகுக்குக் கொடையாகக் கொடுத்ததோடு, வெற்றிகரமான திரைக்கதாசிரியராகவும் திகழ்ந்தவர். பத்திரிகைத் துறையிலும் தன் தடத்தை ஆழமாகப் பதித்த அவரது மறைவு திகைப்பையும் வேதனையையும் ஒருங்கே ஏற்படுத்துகிறது.

எழுத்தின் எல்லா வடிவங்களிலும் தனக்கான தனித்துவத்தோடு பங்களித்த, ஆளுமை மிக்க ஒரு மனம் ஓய்வு பெற்றிருக்கிறது. இது பேரிழப்பு. தென்னிந்திய இலக்கிய வாசகர்களையும் கலா ரசிகர்களையும் துயரத்தில் ஆழ்த்தக்கூடியது. மாபெரும் எழுத்துக் கலைஞனுக்கு என் இருதயப்பூர்வமான அஞ்சலி" என்று தெரிவித்துள்ளார்.

# பிரிவு உபசார போட்டி வேண்டாமென்று ஓய்வு பெற்றது ஏன்..? அஸ்வின் விளக்கம்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் தமிழகத்தை சேர்ந்த அஸ்வின் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து சமீபத்தில் விடைபெற்றார். சர்வதேச கிரிக்கெட்டில் மொத்தம் 765 விக்கெட் வீழ்த்தியவரான அஸ்வினுக்கு பிரிவு உபசார போட்டி வாய்ப்பு வழங்கியிருக்க வேண்டும். அதற்கு அவர் தகுதியானவர் என இந்திய முன்னாள் கேப்டன் கபில்தேவ் கூறியிருந்தார். இந்நிலையில் பிரிவு உபசார போட்டியை (பேர்வெல் போட்டி) விரும்பாததாலேயே தாம் இப்படி ஆஸ்திரேலிய தொடரின் பாதியிலேயே ஓய்வு பெறும் முடிவை எடுத்ததாக அஸ்வின் கூறியுள்ளார்.

அதற்கான காரணம் குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "என்னைப் பொறுத்த வரை பிரமாண்டமான பிரியாவிடைகள் தவறானது. நீங்கள் யாருக்கும் அதைக் கொடுக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. ஏனெனில் கெரியரின் இறுதியில் யாரும் ஒரு துளி கண்ணீர் விடுவதை நான் விரும்பவில்லை. பேர்வெல் என்பது நட்சத்திர கலாச்சாரத்தின் ஒரு பகுதி என்று நினைக்கிறேன். நாம் ஏன் ஒருவருடைய பின்னே செல்ல வேண்டும்? அவர்கள் மீது இருக்கும் அன்பை பற்றி நான் புரிந்து கொள்கிறேன். ஆனால் உண்மையில் அந்த நபர்களின் சாதனைகள், மரபு ஆகியவை மட்டுமே உத்வேகமாக எடுத்துக்கொள்ளபட வேண்டும். பேர்வெல் என்பது தவறானது. என்னைக் கொண்டாடும் வகையில் ஒரு போட்டி நடத்தப்பட்டால் அது விளையாட்டுக்கு அவமதிப்பு என்று நினைக்கிறேன். ஓய்வு மீது எனக்கு எந்த வருத்தமும் இல்லை. டெஸ்ட் கிரிக்கெட்டில் 537 விக்கெட்டுகளுக்காக மகிழ்ச்சியாக இல்லையென்றால் பின்னர் எதற்குத்தான் மகிழ்ச்சியுடன் இருக்க முடியும்?

இனிமேலும் விளையாடாமல் விடை பெறுவதில் ஏன் வருத்தமாக இருக்க வேண்டும்?. வாழ்க்கையில் இந்தப் பகுதியை மட்டுமே விட்டுள்ளேன். இப்போதும் கிரிக்கெட்டை பற்றி யூடியூபில் பேசுவேன். பயிற்சி கொடுப்பதை விரும்புவேன். அப்படி கிரிக்கெட்டை சுற்றி என்னால்மகிழ்ச்சியாகஇருக்கமுடியும்.ஓய்வுபெற்றதற்காக வருத்தமும் இல்லை. யார் மீதும் கோபமும் இல்லை. துளியளவும் அழவில்லை. எனது ஓய்வுக்கு யாரும் பொறுப்பும் கிடையாது" எனக் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.